**தூதுவர் ஜூலீ ஜே. சங் அவர்கள்**
**IPS ஆண்டுவிழா/புத்தக வெளியீட்டு விழாவில் தெரிவித்த கருத்துக்கள்**
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்**
**பெப்ரவரி 27, 2023, திங்கட்கிழமை, பிற்பகல் 3:30 மணி**
**சினமன் கிராண்ட் கொழும்பு**

உங்களது அன்பான வரவேற்பிற்கு மிக்க நன்றி. இந்த நிகழ்வை நடத்தியதற்காக ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் எம்மனைவரையும் ஒன்றிணைப்பதற்காக கடினமாக உழைத்த எமது மாநாட்டு ஏற்பாட்டாளர்களான கலாநிதி ஹரிந்த விதானகே, கலாநிதி சனத் டி சில்வா மற்றும் KDU வின் மூலோபாயக் கற்கைகள் துறையினைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் எல்.ஆர். அமரசேகர ஆகியோருக்கு குறிப்பாக நான் நன்றிகூற விரும்புகிறேன். இலங்கை மிகவும் பாதுகாப்பானதாகவும் வளமானதாகவும் இருக்கும் ஒரு எதிர்காலத்தை நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதால், இன்று இங்குள்ள அனைத்து KDU மாணவர்களையும் பார்ப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

மேதகு விருந்தினர்களே, பங்கேற்பாளர்களே, துணைவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் அவர்களே - ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பு இதே இடத்தில் ஒரு மாநாட்டில் பைடன்-ஹரிஸ் நிர்வாகம் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் எவ்வாறு ஒரு புதிய ஒழுங்கினை முன்னோக்கி நகர்த்திக் கொண்டிருந்தது என்பதைப் பற்றி விவாதிப்பதற்காக நாங்கள் சந்தித்தோம். சுதந்திரமான மற்றும் திறந்த, செழிப்பான, இணைக்கப்பட்ட, மீள்தன்மையுடைய மற்றும் பாதுகாப்பான ஒரு இந்தோ-பசிபிக்கிற்கான எமது பகிரப்பட்ட தொலைநோக்கினை அமெரிக்க இந்தோ-பசிபிக் வியூகம் அல்லது IPS இன் ஐந்து அடிப்படையான கூறுகள் எவ்வாறு உள்ளடக்குகின்றன என்பதை நான் வரையறை செய்தேன்.

இந்த மூலோபாயம் ஒரு இராணுவ அல்லது பாதுகாப்புக் கூட்டணி அல்ல. எனினும், எமது பகிரப்பட்ட மதிப்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நாடுகளின் நடத்தையை மிகவும் உன்னிப்பாக ஆராய்வதை அது உள்ளடக்கியதென நான் குறிப்பிட்டேன். IPSஇனை இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான “எமது” தொலைநோக்கு என நான் விவரித்தேன், ஏனெனில் இந்த தொலைநோக்கு எனது நாட்டிற்கும் மற்றும் இலங்கை உட்பட பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுக்கும் பொதுவானதென நான் நம்புகிறேன். இராஜதந்திரிகளாக இருக்கும் பல சகாக்களை நான் இங்கு பார்க்கிறேன்; பல நாடுகள் பல பகிரப்பட்ட விழுமியங்களைக் கொண்ட தமது சொந்த இந்தோ பசிபிக் மூலோபாயத்தினைக் கொண்டுள்ளன. இன்னும் தெளிவாக கூறுவதாயின், அது ஒருபோதும் நாடுகளைத் தேர்ந்தெடுப்பது தொடர்பானதல்ல, எனினும் அது விழுமியங்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பானதாகும்.

IPS தொடர்பாக அதன் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்துரையாடவும், ஒரு வருடத்திற்கு முன்பு நடைபெற்ற அந்த மாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு விவாதங்கள் மற்றும் கட்டுரைகளை உள்ளடக்கிய ஒரு புத்தகத்தை வெளியிடவும் உங்களுடன் மீண்டும் இங்கு இணைந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். IPS இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான ஒரு தொலைநோக்கினை உள்ளடக்கியதாகும் எனும் உண்மையை “இந்தோ-பசிபிக்கிற்கான ஒரு பகிரப்பட்ட பார்வை” எனும் தலைப்புடைய இப்புத்தகம் பிரதிபலிக்கிறது. மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மட்டுமன்றி, கடந்த வருட கலந்துரையாடலில் கலந்துகொண்ட குழு உறுப்பினர்களால் எழுதப்பட்ட சில முக்கிய கொள்கை ஆய்வுக்கட்டுரைகளையும் இது உள்ளடக்கியுள்ளது.

அந்த ஆய்வுக்கட்டுரைகளில் உள்ளவை அவற்றை எழுதிய ஆசிரியர்களின் கருத்துக்களேயன்றி அவை அமெரிக்காவினதோ அல்லது KDUவினதோ கருத்துகளைப் பிரதிபலிக்க வேண்டிய கட்டாயமில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இருப்பினும், ஒரு சில கட்டுரைகளில் இருந்து சில முக்கிய விடயங்களைத் துலக்கிக்காட்டுவதற்கு நான் விரும்புகிறேன்.

தனது ஆய்வுக்கட்டுரையில் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் சுலனி அத்தநாயக்க, அதை "21 ஆம் நூற்றாண்டில் ஈடுபாட்டின் முக்கிய அரங்கம்" என்று விவரிக்கிறார். இதே கருத்தை எதிரொலிக்கும் கடந்த ஆண்டு ஒக்டோபரில் வெளியிடப்பட்ட அமெரிக்க தேசிய பாதுகாப்பு மூலோபாயம், "உலக பொருளாதார வளர்ச்சியின் பெரும்பகுதிக்கான உந்துசக்தியாக இந்தோ-பசிபிக் பிராந்தியம் காணப்படுவதுடன் 21ஆம் நூற்றாண்டின் பூகோளஅரசியலின் மையமாகவும் அது மாற்றமடையும்..... உலகிற்கு வேறு எந்தப் பகுதியும் அந்த அளவிற்கு முக்கியமானதாக இருக்காது." எனக் குறிப்பிடுகிறது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நடைபெறும் விடயங்கள் முழு உலகத்தையும் பாதிக்கலாம் என்பதையும், இது குறிப்பாக இலங்கைக்கு பொருந்தும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும், இது எம்மனைவருக்கும் தெரிந்தவாறு, உலகின் பரபரப்பான சில கப்பல் பாதைகளுக்கு அருகே உள்ளது. அது சிறிய பொறுப்பு அல்ல. கணேசன் விக்னராஜா தனது ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிடுவது போன்று, "ஆசியாவின் உலகளாவிய எழுச்சியின் பின்னணியில் உலகின் பரபரப்பான கிழக்கு-மேற்கு வர்த்தகம் மற்றும் கைத்தொழில்துறை ஆகியவற்றின் வழித்தடங்களில் ஒன்றாக இந்து சமுத்திரம் பரிமாற்றமடைந்ததானது 21 ஆம் நூற்றாண்டின் அபிவிருத்தி வெற்றிக் கதைகளுள் ஒன்றாகும். உலகளாவிய எண்ணெய் ஏற்றுமதியில் மூன்றில் இரண்டு பங்கினையும் உலகளாவிய மொத்த சரக்குப் போக்குவரத்தில் மூன்றில் ஒரு பங்கினையும் இந்தியப் பெருங்கடலின் கடல்சார் வர்த்தகம் கொண்டுள்ளது.

IPSஇனது ஓராண்டு நிறைவிற்கு மேலதிகமாக, அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 வது ஆண்டு நிறைவினையும் இம்மாதம் குறிக்கிறது. எமது இரு நாடுகளுக்கிடையிலான உறவானது பரந்தது மற்றும் ஆழமானது. அதன் மையத்தில் இருப்பது மக்களுக்கான, முன்னேற்றத்திற்கான மற்றும் பங்காண்மைக்கான எமது பகிரப்பட்ட அர்ப்பணிப்பாகும். ஜோர்ஜ் குக் தனது ஆய்வுக்கட்டுரையில் வலியுறுத்துவது போல், பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்களுக்கான அர்ப்பணிப்பும் இந்த உறவில் அடங்கும். "அமெரிக்க-இலங்கை உறவுகளின் எதிர்காலம் ஜனநாயக அரங்கில் உறுதியாக உள்ளது. இருநாடுகளதும் கட்டமைப்புகளில் ஜனநாயக விழுமியங்கள் நீண்ட காலமாக வேரூன்றியிருப்பதுடன், எல்லா சந்தர்ப்பங்களிலும் அதில் தங்கியிருக்க வேண்டியிருப்பதும் இரு நாடுகளுக்கும் சாதகமாக உள்ளது." என குக் குறிப்பிடுகிறார். ஜனநாயகம் சில நேரங்களில் குழப்பமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை, எனினும் ஜனநாயகத்தின் அடிப்படை அடித்தளங்களான கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகள், சுயாதீன நிறுவனங்கள், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் என்பன ஒரு நாட்டை வலிமையாக்குகின்றன.

இம்மாத ஆரம்பத்தில், இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகளில் ஒருவரான, அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட், கலந்துரையாடல்களுக்காக கொழும்புக்கு விஜயம் செய்தார். ஒரு பரந்த அளவிலான பகிரப்பட்ட நலன்களின் இருதரப்பு பங்காளராக எங்கள் உறுதிப்பாட்டை அக்கலந்துரையாடல்களில் நாங்கள் மீண்டும் வலியுறுத்தினோம்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான வெளிநாட்டு உதவிகளாக 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 2 பில்லியன் டொலர்களுக்கு மேல் அமெரிக்கா முதலீடு செய்தது மற்றும் 2023 ஆம் ஆண்டிலும் பல பில்லியன்களை ஒதுக்கவும் திட்டமிடுகிறது. இது 2018ஆம் ஆண்டு முதல் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நாங்கள் மேற்கொண்ட மொத்தம் 11.5 பில்லியன் டொலர் பெறுமதியான முதலீடுகளின் அடிப்படையில் அமைகிறது. குறிப்பாக, இங்கு இலங்கையில், இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் பாடசாலையில் பிள்ளைகளுக்கு உணவு வழங்கப்படுவதையும், வெற்றிகரமான பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்குத் தேவையான உரங்கள் விவசாயிகளுக்கு கிடைப்பதையும் உறுதி செய்வதற்கும் கடந்த ஜூன் மாதம் முதல் கிட்டத்தட்ட 270 மில்லியன் டொலர் பெறுமதியான அமெரிக்க உதவியை நாம் அறிவித்துள்ளோம். வரவிருக்கும் வாரங்களில் இலங்கைக்கு TSP உரத்தின் மற்றுமொரு தொகுதியினை நாம் வரவேற்கவுள்ளோம், அது சிறுபோக நெற்செய்கைக்கு முன்னதாகவே இங்கு வந்துசேரும்.

சுதந்திரமான மற்றும் திறந்த, செழிப்பான, இணைக்கப்பட்ட, மீள்தன்மையுடைய மற்றும் பாதுகாப்பான இந்தோ-பசிபிக் பகுதிக்கான எங்கள் பகிரப்பட்ட தொலைநோக்கினை நிறைவேற்றுவதில் நாங்கள் எவ்வாறு செயற்படுகிறோம் என்பதை விரிவாக கோடிட்டுக் காட்ட இப்போது சில நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறேன். ஒரு வருடத்திற்கு முன்பு, “சுதந்திரமான மற்றும் திறந்த” இந்தோ-பசிபிக் என்பது திறந்த கடல் வழியாக கப்பல்களுக்கு வழிசெலுத்துவதற்கான சுதந்திரம் காணப்படுதல் என நான் குறிப்பிட்டேன். நான் முன்னர் குறிப்பிட்டது போன்று, இலங்கையின் இருப்பிடத்தைப் பொறுத்தவரை இது மிகவும் முக்கியமானதாகும். வழிசெலுத்துவதற்கான சுதந்திரம் இலங்கையை அதன் புவிசார் மூலோபாய நிலையை திறம்பட பயன்படுத்த அனுமதிக்கிறது மற்றும் கொழும்பு துறைமுகம் பிராந்தியத்தில் மிகவும் பரபரப்பான ஒன்றாக மாற உதவியுள்ளது. அதனால்தான் வழிசெலுத்தல் சுதந்திரத்தை அமெரிக்கா ஊக்குவிப்பதானது ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக்கை ஆதரிப்பதுடன் இலங்கையின் நலன்களுடன் நேரடியாகத் தொடர்புபடுகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் நான் பேசியபோது, செயலாளர் பிளிங்கன் சுதந்திரம் என்பது “உங்கள் எதிர்காலத்தை எழுதும் திறன் மற்றும் உங்கள் சமூகத்திலும் உங்கள் நாட்டிலும் நடைபெறும் விடயங்களில் ஒரு தீர்மானிக்கும் அதிகாரம் உங்களுக்கு இருத்தல்” என விவரித்ததை நான் குறிப்பிட்டேன். இப்போது, உக்ரைன் மீதான மொஸ்கோவின் அர்த்தமற்ற படையெடுப்பு, சுதந்திரம் மற்றும் இறையாண்மையின் இந்த மிக அடிப்படையான சர்வதேசக் கொள்கையை எப்படித் தாக்கியது என்பதை கடந்த ஆண்டில் நாம் பார்த்தோம், ஆகையினால்தான் அமெரிக்கா இந்த கொடூரமான ஆக்கிரமிப்புச் செயலுக்கு எதிராக உக்ரைன் மக்களுடன் நின்றதுடன் தொடர்ந்தும் அவ்வாறே நிற்கும்.

கடந்த ஆண்டில், ஜனநாயகம், நியாயமான சட்டத்தின் ஆட்சி, சுதந்திரமான மற்றும் திறந்த ஊடகம், சிவில் சமூக அமைப்புகளின் துடிப்பான சமூகம், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றையும் பிராந்தியம் முழுவதுமுள்ள மக்களையும் மேம்படுத்துவதன் மூலம் பிராந்தியம் திறந்ததாகவும் அணுகக்கூடியதாகவும் இருப்பதை உறுதிசெய்வதற்காக, இந்தோ-பசிபிக் முழுவதுமுள்ள பங்காளர்களுடன் அமெரிக்கா நெருக்கமாகப் பணியாற்றியுள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் செழிப்பினை முன்னோக்கி நகர்த்துவதற்கான ஒரு அர்ப்பணிப்பினையும் எமது IPS கொண்டுள்ளது. இலங்கை தற்போது எதிர்கொள்ளும்

பொருளாதார சவால்களை நாம் கருத்தில் கொள்ளும்போது ஒரு செழிப்பான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தினைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து பணியாற்றுவது முன்னெப்போதையும் விட தற்போது மிகவும் முக்கியமானது என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியும் என நான் நினைக்கிறேன். அத்துடன் நல்ல பொருளாதார நிர்வாகமும் நல்ல அரசியல் நிர்வாகமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதையும் அது எமக்கு நினைவுபடுத்துகிறது. அமெரிக்கா இலங்கையின் பங்காளராகும், மற்றும் இலங்கை இந்த கடினமான காலத்தை சமாளிக்கும் நேரத்தில் அமெரிக்கா இலங்கையுடன் இருக்கிறது என்பதை நான் நான் தெளிவாகக் கூறுகிறேன்.

அமெரிக்கா இலங்கையின் மிகப்பெரிய தனி நாட்டு ஏற்றுமதிச் சந்தையாகும், இலங்கை வருடாந்தம் ஏற்றுமதி செய்யும் 11.9 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களில் கிட்டத்தட்ட 2.8 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த எண்ணிக்கை கொவிட் பெருந்தொற்றுக்காலத்திலும் கூட அதிகரித்தது. அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் இலங்கை நிறுவனங்கள் 180,000 இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. ஆகையினால்தான், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான முயற்சியிலிருக்கும் இலங்கைக்கு உதவி செய்வதில் அமெரிக்கா முழுமையான உறுதியுடன் உள்ளது. அத்துடன் பொருளாதார மீட்சிக்கான பாதைக்கு இலங்கை திரும்புவதற்கு உதவுவதற்காக அதன் எதிர்காலத்தில் முதலீடு செய்துள்ள அனைத்து பிரதான நாடுகளிடமிருந்தும் குறிப்பான மற்றும் நம்பகமான நிதியிடல் உத்தரவாதங்கள் தொடர்பான ஒரு உறுதிப்பாடு மிக விரைவாகக் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கிறேன்.

இலங்கையின் இயற்கை வளங்களும் தொழில் முனைவு மனப்பான்மையும் மகத்தான பொருளாதார ஆற்றலை உருவாக்கும் அதே வேளையில், இந்த ஆற்றலின் பலனை முழுமையாக அடைந்துகொள்வதற்கு, வெளிப்படையான மற்றும் முழுமையாக அனைவரையும் உள்ளடக்கிய ஒரு வணிகச் சூழலைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் உடனடி பொருளாதார மீட்சி எனும் விடயத்திற்கு அப்பால், நீண்டகாலம் நிலைக்கும் செழிப்பிற்கு திறந்த முதலீட்டுச் சூழல் நீண்ட காலத்திற்கு நிலவுதல் முக்கியமானதாகும். அமெரிக்க நிறுவனங்களும் வெளிநாட்டு நிறுவனங்களும் இதையே என்னிடம் எப்பொழுதும் கூறுகின்றன. ஆகையினால்தான், நிதி நிறுவனங்கள் மற்றும் அரச நிதிகளை வலுப்படுத்தும், நிலைபேறான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை போஷிக்கும், மற்றும் அதிக சர்வதேச முதலீடுகளை ஈர்க்க உதவும் கொள்கைகளை ஆதரிப்பதற்கும் அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது.

இன்னும் விரிவாகக் கூறுவதாயின், கடந்த ஆண்டில் இப்பிராந்தியத்தில் எமது பொருளாதார ஈடுபாட்டை ஆழப்படுத்துவதன் மூலம் பிராந்திய செழிப்பினை ஊக்குவிப்பதற்கு உதவி செய்துள்ளதுடன் இந்தோ-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பினை ஆரம்பித்து வைத்ததன் ஊடாக பொருளாதார ஒத்துழைப்பிற்கான ஒரு உறுதியான மாதிரியினையும் நாம் வழங்கியுள்ளோம். பொருளாதார ஒத்துழைப்பிற்கான ஒரு உறுதியான தொலைநோக்கினை நிர்ணயிப்பதற்காகவும், விநியோக சங்கிலிகளின் மீள்தன்மை, டிஜிட்டல் பரிமாற்றம் மற்றும் தூய்மையான ஆற்றல் ஆகியவற்றை உள்ளடக்கிய 21 ஆம் நூற்றாண்டின் முக்கிய சவால்களை எதிர்கொள்வதற்காகவும் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் IPEFஇனை 13 பிராந்திய பங்காளர்களுடன் இணைந்து ஜனாதிபதி பைடன் 2022 மே மாதத்தில் தொடங்கிவைத்தார்.

தொடர்புகள் மற்றும் பங்காண்மைகளை உருவாக்குவதற்காகவும், சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்வதற்காகவும் மற்றும் விநியோகச் சங்கிலிகள், தூய்மையான ஆற்றல், டிஜிட்டல் உட்கட்டமைப்பு போன்ற விடயங்களில் புதுமையான சிந்தனையைத் தூண்டுவதற்காகவும் கடந்த மாதத்தில்தான், சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வர்த்தகத் தலைவர்களை உள்ளடக்கிய 1,000 மெய்நிகர் பங்கேற்பாளர்களையும் மற்றும் 270 நேரடிப் பங்கேற்பாளர்களையும் ஒன்றுதிரட்டி ஐந்தாவது இந்தோ-பசிபிக் வணிக மன்றத்தை அமெரிக்காவும் ஜப்பானும் இணைந்து ஜப்பானின் டோக்கியோ நகரில் நடத்தின. அத்துடன் “அனைவருக்கும் ஒரு மீள்தன்மையுடைய மற்றும் நிலைபேறான ஒரு எதிர்காலத்தை உருவாக்குதல்” எனும் தொனிப்பொருளில் APEC மாநாட்டினையும் இவ்வாண்டின் பிற்பகுதியில் அமெரிக்கா நடத்தும். இப்பிராந்தியமானது கொவிட்-19 பெருந்தொற்றிலிருந்து விடுபட்டு, விநியோகச் சங்கிலிகளில் ஏற்பட்ட பாதிப்புகள், போராடும் சுகாதார அமைப்புகள், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றை கூட்டாக எதிர்கொள்ள முற்படும் நிலையில், நடைமுறைச்சாத்தியமான பொருளாதாரக் கொள்கைகளை மேம்படுத்துவதற்கு இது உதவி செய்யும்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் நாம் தொடர்புகளை தொடர்ந்து உருவாக்குவது பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானதாகும். ஆனால் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகள் பொருளாதார இணைப்புகளை விட மிக ஆழமானவை. எழுபத்தைந்து ஆண்டுகளாக எமது இரு நாடுகளும் ஒரு வலுவான உறவைக் கொண்டுள்ளன: அதில் எழுபது ஆண்டுகளாக அமெரிக்கா-இலங்கை ஃபுல்பிரைட் நிகழ்ச்சித்திட்டம் 1,100இற்கும் மேற்பட்ட சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எமது நாடுகளுக்குமிடையே புலமைப் பரிமாற்றங்களில் பயணம் செய்வதற்கு உதவியது. அதில் அறுபதுக்கும் மேற்பட்ட வருடங்களாக USAID ஆனது 2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான அமெரிக்க உதவிகளின் ஊடாக இலங்கை மக்களுக்கு தமது நாட்டின் அபிவிருத்திப் பாதையை மேம்படுத்துவதற்கு உதவி செய்து வருகிறது. எமது அற்புதமான இளைஞர் மன்றத்தின் ஊடாக அடுத்த தலைமுறை இலங்கைத் தலைவர்களுக்குப் பயிற்சியையும், நாடு முழுவதும் உள்ள உயர்நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சியையும் மற்றும் இன்னும் பலவற்றையும் நாம் வழங்குகிறோம். சில வாரங்களுக்கு முன்னர் நாடு முழுவதிலுமிருக்கும் எமது இளைஞர் மன்றத்தினர் நேரில் ஒன்றுகூடினர்.

Partners in the Blue Pacific இனை ஆரம்பித்தல், ASEAN அமைப்புடனான எங்களது உறவை ஆழப்படுத்துதல், ஐந்தாவது இந்தோ-பசிபிக் வணிக மன்றத்தினை (IPBF) நடத்துவதற்காக ஜப்பானுடன் கூட்டு சேர்தல், குவாட் மற்றும் அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய இந்தோ-பசிபிக் ஆலோசனைகள் போன்ற புதிய வடிவங்கள் மற்றும் எங்களின் நீண்டகால உறவுகள் தொடர்பாக எமது நட்புநாடுகள் மற்றும் எமது பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுதல் உட்பட பிராந்தியத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் தொடர்புகளை கட்டமைப்பதற்கும், பல அரசு நிறுவனங்களுடன் பங்காண்மையினை வலுப்படுத்துவதற்கும் நாங்கள் பரந்த அளவில் பணியாற்றியுள்ளோம். கடந்த சில ஆண்டுகளில் நாங்கள் கற்றுக்கொண்டதைப்போன்று, “மீள்தன்மையினை” உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு மிகமுக்கியமானதாகும். காலநிலை மாற்றம் எனும் உலகளாவிய சவாலை நாம் எதிர்கொள்ளும் நிலையில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுதல் அவசியமாகும். ஆகையினால்தான், புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் மற்றும் நிலைபேறான, அனைவரையும் உள்ளடக்கிய, சந்தை அடிப்படையிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் வழிகளில் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கமடையக்கூடிய இலங்கையின் திறனை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கையுடன் அமெரிக்கா கூட்டுச் சேர்கிறது. 274 மில்லியனுக்கும் அதிகமான பாதுகாப்பான

மற்றும் செயல்விளைவுள்ள கொவிட்-19 தடுப்பூசிகளை வழங்கியதன் மூலமும், இந்திய-அமெரிக்க தடுப்பூசி செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ASEAN அவசர நடவடிக்கை மையத்திற்கான உதவி போன்ற கூட்டு முன்முயற்சிகள் ஊடாக எமது பங்காளர்கள் எதிர்கால சுகாதார அவசரநிலைகளுக்குத் தயாராவதற்கு உதவுவதன் மூலமும் பிராந்திய ரீதியாக நாங்கள் மீள்தன்மையினை மேம்படுத்தியுள்ளோம். Clean Power Asia, U.S.-India Strategic Clean Energy Partnership, மற்றும் South Asia Regional Initiative for Energy ஆகிய திட்டங்கள் உட்பட பிராந்தியம் முழுவதும் தூய்மை ஆற்றல், சுத்தமான காற்று மற்றும் காலநிலை மீள்தன்மை தொடர்பான செயற்திட்டங்களில் பில்லியன் கணக்கான டொலர்களையும் நாங்கள் செலவிட்டு வருகிறோம்.

ஒரு வலுவான பாதுகாப்பு பங்காண்மை என்பது எமது இருதரப்பு உறவின் ஒரு மிக முக்கிய அங்கமாக தொடர்ந்தும் இருந்து வருகிறது. அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்கள் பல்வேறு வடிவங்களில் பரிணமிக்கும்போது, எமது பாதுகாப்பு அணுகுமுறைகளும் அதற்கேற்றவாறு பரிணமிக்க வேண்டியது அவசியமாகும். எனினும், நாம் எதை எதிர்கொண்டாலும், எமது இந்திய-பசிபிக் தொலைநோக்கினை ஆதரிக்கும் கூட்டணிகள் மற்றும் பங்காண்மைகள்தான் எமது மிகப்பெரிய பலமாக தொடர்ந்தும் இருக்கின்றன. நாம் இணைந்து பயிற்சி செய்யும்போதும், கடல்சார் பாதுகாப்பு, பேரிடர் நிவாரணம் மற்றும் தளவாடங்கள் போன்ற விஷயங்களில் நிபுணர்களை பரிமாறிக்கொள்ளும்போதும் அல்லது முக்கியமான உபகரணங்கள் மற்றும் தளங்களை இடம் மாற்றும்போதும் எமக்கிடையிலான இருதரப்பு உறவு பலப்படுகிறது.

கடந்த மாதம்தான் நாங்கள் Cooperation Afloat Readiness and Training, (CARAT) பயிற்சிகளை நடத்தினோம். CARAT என்பது அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான மிகப்பெரிய இருதரப்பு இராணுவ கூட்டுப்பயிற்சியாகும். அது இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு மிகமுக்கியமான ஒன்றாகும் என அமெரிக்காவில் உள்ள நாங்கள் கருதுகிறோம். இலங்கை கடற்படைக் கப்பல்களான கஜபாகு மற்றும் விஜயபாகு என்பன இப்பயிற்சியில் பங்கேற்றதைக் கண்டு நான் மிகவும் பூரிப்படைந்தேன். தற்போது பெருமையுடன் இலங்கையர்களின் கைகளில் உள்ள இவ்விரு கப்பல்களும் அமெரிக்கா வழங்கிய நன்கொடைகளாகும். இலங்கை கடற்படையின் வரலாற்றில் மிக நீண்ட பயணங்களில் ஒன்றை மேற்கொண்டு இங்கு வந்து சேர்ந்த விஜயபாகு கடந்த நவம்பர் மாதத்தில்தான் ஒரு அழகான விழாவில் கடற்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டது. இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் இறைமை தொடர்பில் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாக அது விளங்குகின்றது.

உறவுகளை ஆழப்படுத்துவதற்கு பல்வேறு வழிகளில் CARAT பயிற்சி எவ்வாறு பங்காற்றியது என்பதைப் பார்ப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உதாரணமாக, ஒரு இயற்கை அனர்த்தம் ஏற்பட்டால், இலங்கைக் குடிமக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, எங்கள் இராணுவத்தினர் நீர் சுத்திகரிப்பு பயிற்சியை நடத்தினர். இராணுவத் துறையில் பெண்கள் அதிகரித்த தாக்கத்தை ஏற்படுத்தும் பல வழிகள் குறித்து இரு நாடுகளதும் இராணுவத்தில் பணிபுரியும் உறுப்பினர்கள் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்கிய ஒரு முக்கியமான மகளிர் சமாதான மற்றும் பாதுகாப்பு நிகழ்வினையும் நாங்கள் நடத்தினோம்.

எங்களுடைய பாதுகாப்பு உறவின் விசாலத்தினை விளக்குவதற்காக, இவ்வாண்டின் பிற்பகுதியில், பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகள் பற்றியும் இந்த மிகமுக்கியமான விடயப்பரப்பில் நாம் எவ்வாறு இணைந்து பணியாற்றலாம் என்பது பற்றியும் கலந்துரையாடப்படும் ஒரு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு

தொடர்பில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவோம் என்பதைக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

முக்கால் நூற்றாண்டு காலமாக எமது நாடுகளுக்கிடையேயான வலுவாக வளர்ந்து வரும் ஒரு உறவை நாம் போஷித்து வருகிறோம். CARAT போன்ற பெரிய அளவிலான இருதரப்பு இராணுவப் பயிற்சிகள் மூலமாகவும், தகவல் மற்றும் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதற்காக நாம் ஒன்றுகூடும் இது போன்ற நிகழ்வுகள் மூலமாகவும் அந்த உறவின் வளர்ச்சி தொடர்கையில் – தனது இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும், அனைத்து இலங்கை மக்களுக்கும் செழிப்பை ஏற்படுத்தக்கூடிய பலமான நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அதிகளவில் திறன் பெற்ற ஒரு வலிமையான மற்றும் மிகவும் மீள்தன்மையுடைய ஒரு இலங்கை தோற்றம் பெறுவதை நாம் காண்போம் என நான் நம்புகிறேன். இறையாண்மை பற்றி பேசும்போது, மரியாதை பற்றி பேசுகிறேன். மரியாதைக்குரிய அத்தொலைநோக்கினை யதார்த்தமாக்குவதற்காக எமது நட்பு நாடுகள் மற்றும் பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளும் மக்களும் அப்பிராந்தியத்திற்கான எங்களது தொலைநோக்கினைப் பகிர்ந்து கொள்கிறார்கள், மற்றும் நாம் ஒன்றாக இணைந்து பணியாற்றும்போது, நாம் ஒன்றாக இணைந்து ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கலாம்.

எமது பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் சமூகங்களுக்கும் செழிப்பான மற்றும் பாதுகாப்பான ஒரு எதிர்காலத்தை உறுதிசெய்ய முடியும் என்பதை அமெரிக்கா அறிந்திருக்கிறது. இந்தோ-பசிபிக்கின் வரலாற்று ரீதியான சவால்களை எதிர்கொள்வதற்கும் 21 ஆம் நூற்றாண்டின் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும் நாம் ஒன்றுபடுவது மிகவும் முக்கியமானதாகும். எனது உரையினை நிறைவு செய்வதற்கு முன்னர், இந்த நிகழ்வை ஒழுங்கமைப்பதில் உந்து சக்தியாக இருந்த KDU இன் துணைவேந்தரான மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் மற்றும் பாதுகாப்புக் கற்கைகளுக்கான டேனியல் கே. இனோயே ஆசியா-பசிபிக் மத்திய நிலையத்தின் பணிப்பாளரான, ரியர் அட்மிரல் (ஓய்வுபெற்ற) பீட்டர் குமாடாஒடாவோ ஆகியோருடன் இணைந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் என்பதைக் கூற விரும்புகிறேன். நூற்றுக்கணக்கான இலங்கையின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்கியதன் மூலம் DKI-APCSS எமது வலுவான பாதுகாப்புப் பங்காண்மையில் ஒரு முக்கியமான பங்கினை வகித்துள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியம் தொடர்பாக ஒரு பொதுவான தொலைநோக்கினை நாம் பகிர்ந்து கொள்கிறோம் என்று கூறி எனது உரையினை நான் ஆரம்பித்தேன். அது மரியாதை மற்றும் பகிரப்பட்ட விழுமியங்களின் ஒரு தொலைநோக்கு ஆகும். இந்தக் கருத்துக்கள் அந்தத் தொலைநோக்கினை கோடிட்டுக் காட்டியுள்ளன என்றும், மிக முக்கியமாக, சுதந்திரமான மற்றும் திறந்த, செழிப்பான, இணைக்கப்பட்ட, மீள்தன்மையுடைய மற்றும் பாதுகாப்பான ஒரு இந்தோ-பசிபிக்கிற்கான ஒரு பங்காண்மையினால் எவற்றையெல்லாம் அடைய முடியும் என்பதைப் பற்றிய சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டதாக நான் நம்புகிறேன்.

மக்கள், முன்னேற்றம் மற்றும் பங்காண்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தி நாம் ஒன்றிணைந்து பணிபுரியும் அடுத்த 75 ஆண்டுகளை வரவேற்போம்.

நன்றி.